## 16 : செடியபப்பதா விஹாரா ஏற்பு

மஹாமேஹா தோப்பில் இருந்த தேரா, அந்த நாட்டு மன்னனின் வீட்டில் உணவருந்தியும், நகருக்குள் சென்று பிட்சை எடுத்தும் மக்களுக்கு போதனைகளை செய்தவாறும் இருபத்தி ஆறு நாட்களைத் கழித்தார். அசல்தா *(Asalha)* மாதத்தின் பௌர்ணமி பிறை தினத்தில், அவர் அங்கு வந்து தங்கிய பதிமூன்றாம் நாளன்று மன்னனுக்கு விழிப்புடன் இருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தும் மஹாபாமத சுத்தனா *(Mahappamada-suttanta)* என்ற போதனையை செய்த பின் அங்கிருந்துக் கிளம்பி மிசாக மலை எனப்படும் அன்றைய சிடியா மலை *(Cetiya-mountain)* பகுதியிலும் ஒரு விகாராவை நிறுவ ஆசை கொண்டு கிழக்கு வாசல் வழியே அங்கு சென்றார்.

மன்னனுக்கு தேரா கிளம்பிச் சென்ற செய்தி தெரிய வர அவர் தன்னுடைய இரண்டு மனைவிகளையும் அழைத்துக் கொண்டு வண்டியில் ஏறி அவரை பின் தொடந்தார். அதற்கு முன் அங்கு சென்றிருந்த தேரா நாககாட்டுக்கா என்ற *(Nagacatukka-tank)* என்ற குளத்தில் குளித்தப் பின் மலை ஏறி உச்சிக்குச் சென்றிருந்தார். அங்கு அவரை சந்தித்த மன்னன் அவருக்கு வணக்கங்களைத் தெரிவிக்க ‘மன்னா, இத்தனை கடுமையான வெய்யிலில் எங்களைத் தொடர்ந்து நீயும் ஏன வந்துள்ளாய்?’ எனக் கேட்ட தேராவிடம் ‘நீங்கள் திடீர் எனக் கிளம்பி விட்டதினால் வருத்தமுற்று உங்களைப் பின் தொடர்ந்து வந்தேன் ‘ என்றார் மன்னர். ‘நாங்கள் இந்த இடத்தில்

மழைக் காலத்தைக் கழிக்க வந்தோம்' என்ற தேரா 'புத்த பிக்குக்கள் மழைக் காலத்தில் ஒன்றிணைந்து எதாவது ஒரு விகாராவில் தங்கி இருக்க வேண்டும். அந்த காலத்தில் வெளியில் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்ற புத்த சமயத்தின் விதி முறையை எடுத்துக் காட்டினர்.

இதனிடையே மன்னனின் மருமகனும், மஹாரிட்டா *(Maharittha)* நாட்டின் முதலமைச்சருமானவர் தன்னுடன் வந்திருந்த ஐம்பத்தி ஐந்து இளைய மற்றும் மூத்த சகோதரர்களுடன் பப்பஜ்ஜா உபதேசத்தை அங்கேயே பெற்றுக் கொண்டு துறவியாயினர்.

அங்கு வந்த அந்த மன்னனும் அங்கு கண்டகா சிடியா *(Kantaka-cetiya)* என பிற்காலத்தில் அழைக்கப்பட்ட, பாறைகளைப் பயன்படுத்தி கட்டப்பட்ட அறுபத்தி எட்டு குகை இல்லங்களை அமைத்துக் கொடுத்தார்.

பாறைகளினால் கட்டப்பட்ட அந்த தங்கும் இடங்கள் தயாரானதும் அசல்தா *(Asalha)* மாத பௌர்ணமி தினத்தில் அந்த மன்னன் அங்கு வந்து அவற்றை தேராவிடம் தானமாகக் கொடுத்தார். அதன் பின் மன்னன் தன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். கருணை மிக்க தேராக்களும் அங்கு தங்கி இருந்தவாறு ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து வந்தனர்.

வாழ்வின் அனைத்து நிலைகளையும் கடந்து நின்ற தேரா முப்பத்தி இரண்டு மாலக்காவிற்கும் *(mälakas)* , விகாராவிற்கும் எல்லைகளை அமைத்தப் பின், அவற்றில் முதலாவதாக நிறுவப்பட்ட தம்பாரு *(Tumbaru)* என்ற

மாலக்காவில் பப்பஜ்ஜா உபதேசத்தை ஏற்க முடியாமல் போன பலருக்கும் உபசம்பாதாவை போதித்திருந்தார். அது போல சிடியா மலையில் மழை காலத்தில் மன்னனுடன் அங்கு வந்திருந்த அறுபத்தி இரண்டு பேர் அரஹன்தாக *(துறவி)* மாறி மன்னனின் மதிப்பைக் கூட்டினர். அதனால் அங்கு கூடி இருந்த தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அந்த தேராவின் மீது இருந்த மரியாதையுடன் கூடிய மதிப்பு இன்னும் உயர்ந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினாறாம் பாகமான 'செடியபப்பதா விஹாரா ஏற்பு' என்ற பகுதி இப்படியாக நிறைவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION